

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 166 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 13 – சனிக்கிழமை 27 ஜனவரி 2024 – வெளியீர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 166 : Thiruvalluvar Year - 2055 - Thai 13 - Saturday 27 January 2024 - Dak 12 Pages ₹ 5.00




தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள், நேற்று (26.1.2024) சென்னை, காமராசர் சாலையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




சென்னை, காமராசர் சாலையில் நேற்று (26.1.2024) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள், காந்தியடிகள் காவலர் பதக்கம், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், டாக்டர் நாராயணசாமி நாயுடு வேளாண்மை விருது, முதலமைச்சரின் சிறப்பு விருது, சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சரின் கோப்பைகள் ஆகிய பதக்கங்களையும், கோப்பைகளையும் பெற்றவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

### சென்னை - காமராசர் சாலையில் - அரசின் சார்பில் 75வது குடியரசு தினவிழா! ஆளுநர் ஆர்.என்.ரவி தேசியக் கொடியேற்றினார்!

# ‘அண்ணா பதக்கம்’ - விருதுகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார் !

## முப்படைகள், காவல்துறை மரியாதை - கண் கவரும் கலை நிகழ்ச்சிகள் - அரசுத் துறைகளின் அலங்கார வாகன அணிவகுப்புகள் !

**சென்னை, ஜன. 27-**

**தமிழ்நாடு அரசின் சார்பில் இந்தியத் திருநாட்டின் 75வது குடியரசு தினவிழா, நேற்று (26.1.2024) காலை, சென்னை - மெரினா - காமராசர் சாலையில் கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வீர தீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கங்கள், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள் ஆகியவற்றை விருதாளர்களுக்கு வழங்கி கௌரவித்தார்.**

**இதனைத் தொடர்ந்து - தமிழ்நாடு அரசு மற்றும் தனியார் பள்ளி, கல்லூரி மாணவிகளின் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள், பல்வேறு அரசுத் துறைகளின் திட்டங்கள், சாதனைகளை விளக்கும் அலங்கார வாகனங்களின் அணிவகுப்பு ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.**

**அரசின் சார்பில், சென்னை - காமராசர் சாலையில் மிகச் சிறப்புற நடைபெற்ற குடியரசு நாள் விழா நிகழ்ச்சிகள் பற்றிய விபரம் வருமாறு:-**

தமிழ்நாடு அரசின் சார்பில் - இந்தியத் திருநாட்டின் 75வது குடியரசு தினவிழா, சென்னை - மெரினா - காமராசர் சாலையில் (உழைப்பாளர் சிலை அருகில்) நேற்று காலை நடைபெற்றது.

குடியரசு நாள் விழாவுக்கு சரியாக காலை 8.00 மணிக்கு வருகை தந்த ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பூக்கூடை வழங்கி வரவேற்று, தேசியக் கொடிக் கம்ப மேடை அருகே அழைத்துச் சென்றார்.

ஆளுநர் தேசியக் கொடியேற்ற, நாட்டுப் பண் இசைக்கப்பட்டது.

**அண்ணா பதக்கங்கள்!**

இதனைத் தொடர்ந்து, ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் - முப்படையினர், காவல் துறையினர், தேசிய மாணவர் படை, பல்வேறு காவல் பிரிவினர், வனம் மற்றும் தீயணைப்புப் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

குடியரசு நாளையொட்டி வீர தீரச் செயலுக்கான அண்ணா பதக்கம் உள்ளிட்ட பல்வேறு பதக்கங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி கவுரவித்தார்கள்.

முதல்வர் அவர்கள் - வீர தீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள் தூத்துக்குடியைச் சேர்ந்த யாசர் அராபத், நெல்லையைச் சேர்ந்த டேனியல் செல்வசிங், தூத்துக்குடியைச் சேர்ந்த சிவகுமார் ஆகியோருக்கு வழங்கினார்.

தொடர்ந்து, ‘கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கத்தை’ கிருஷ்ணகிரியைச் சேர்ந்த முகமது ஜுபேருக்கும், ‘சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான’ விருதினை சேலத்தைச் சேர்ந்த பால முருகனுக்கும் வழங்கினார்.

**மதுரை ஆயி அம்மாளுக்கு – முதலமைச்சர் சிறப்பு விருது!**

அதனையடுத்து – அரசுப்பள்ளிக்கு தமது நிலத்தை தானமாக வழங்கிய மதுரையைச் சேர்ந்த ஆயி அம்மாளுக்கு, ‘முதலமைச்சர் சிறப்பு விருது’ வழங்கி, முதல்வர் அவர்கள் கவுரவித்தார்கள்.


தொடர்ச்சி 2ஆம் பக்கம்


### இந்த ஆண்டு; இந்தியாவின் உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் -

## பிரிவினைக் கொள்கைகளைத் தகர்த்தெறியட்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - குடியரசு நாள் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜன. 27-**

**இந்தியத் திருநாட்டின் 75வது குடியரசுத் திருநாளையொட்டி, நேற்று விடுத்த சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “இந்த ஆண்டு; இந்தியாவின் உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் அனைவரையும் உள்ளடக்கிய நோக்கைத் தழுவி, பிரிவினைக் கொள்கைகளைத் தகர்த்தெறியட்டும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

சக குடிமக்கள் அனைவருக்கும் குடியரசு நாள் வாழ்த்துகள்!

நமது இந்திய ஒன்றியத்தின் அடையாளமாக விளங்கும் பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மீதான நமது உறுதிப்பாட்டினைப் புதுப்பித்துக் கொள்வோம்.

இந்த ஆண்டு; இந்தியாவின் உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் அனைவரையும் உள்ளடக்கிய நோக்கைத் தழுவி, பிரிவினைக் கொள்கைகளைத் தகர்த்தெறியட்டும்!

இவ்வாறு தமது வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.







சென்னை, காமராசர் சாலையில் நேற்று (26.1.2024) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோர் தஞ்சாவூர் –தென்னக பண்பாட்டு மையம் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளையும் பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினையும் பார்வையிட்டார்கள். இந்த நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.